**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.32/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சுபஸ்ரீ | Prosecution | PW-1 Cross |
| Father Name | சுந்தரேசன் | Defence | |
| Village | ஆத்துக்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 28/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**26.03.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**எதிரி ஆஜர்.**

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை வரதட்ச்சணை கொடுமை செய்ததால் தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர வேறு பரிகாரம் நான் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் தாய்மாமா மகன் ஆவார். திருமணம் எங்கள் இருவருக்கும் நடந்து எத்தனை நாட்கள் நாங்கள் ஒன்றாக வசித்தோன் என்றால் முழுதாக 3 மாதம் கூட வசிக்கவில்லை. அந்த கால கட்டத்தில் நாங்கள் எங்கு வசித்தோம் என்றால் திருமணமான 1 வாரம் வரையிலும் நாங்கள் வல்லுவகுடியில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் வசித்தோம். அவர்களே அதன் பிறகு என்னிடம் வரதர்ச்சனை கேட்டு என்னை எங்கள் வீட்டிலேயே கொண்டு வந்து விட்டு சென்றுவிட்டார்கள். மேற்படி வரதர்ச்சனை கேட்டது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்தேன். ஆனால் வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் வழக்கு ஏதும் பதியாமல் சமாதானம் பேசி அனுப்பிவைத்துவிட்டார்கள்.

2. அவ்வாறு நான் புகார் கொடுத்ததற்கு அத்தாட்சியாக மனு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த மனுவை இவ்வழக்கில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். உண்மையில் என்னை எதிர்மனுதாரர்கள் வரதட்சனை கேட்டு கொடுமை செய்யவில்லை என்றாலும்

வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 3,4ம் எதிர்மனுதாரர்கள் எனக்கு என்ன உறவு என்றால் ஜெயஸ்ரீ எனக்கு மாமன் மகள், தாமோதரன் அவருடைய கணவன் ஆவார். 3ம் எதிர்மனுதாரர்க்கு எனக்கு முன்பே திருமணம் நடைபெற்றுள்ளதா என்றால் ஆமாம் நடைபெற்றுள்ளது. அவர்கள் என்ன ஊரில் திருமணம் செய்தார்கள் என்றால் அவரது கணவருக்கு வேட்டமங்களம் பூர்வீகமாகும். அது தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. சீர்காழியில் இருந்து அந்த ஊருக்கு 2 மணிநேரம் ஆகுமா என்றால் ஆகும். திருமணத்திற்கு முன்று 1ம் எதிர்மனுதாரர் உறவுக்காரர் என்பதால் அவரது வீட்டிற்கு சென்று வருவீர்களா என்றால் சிறு வயதில் சென்றுள்ளேன். அந்த சமயத்தில் என்னை அவர்கள் நன்றாக பார்த்து கொண்டார்களா என்றால் பார்த்துக்கொண்டார்கள். திருமணத்தின் போது எனது பெற்றோர்கள் நகை மற்றும் சீர்வரிசை சாமன்கள் செய்ததாக சொல்லும் நிலையில் அதற்கு சான்றாக இவ்வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

3. அவ்வாறு நான் எந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன் என்றால் தங்க நகை வாங்கிய ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இருசக்கர வாகனத்திற்க்கு ஈடாக ரொக்க பணம் கொடுத்ததாக சொல்லுமு நிலையில் அதற்கு சான்றாக போட்டோ ஆதாரங்கள் எதுவும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணம் முடிந்து எதிர்மனுதாரர் வீட்டில் எவ்வளவு காலம் தங்கியிருந்தேன் என்றால் 1வாரம் தங்கியிருந்தேன். அந்த காலகட்டத்தில் நாங்கள் ஒன்றாக சமைத்து சாப்பிட்டோமா என்றால் ஆமாம். மறுவீட்டு அழைப்பிற்காக எங்கள் வீட்டிற்கு சென்றேமா என்றால் என் பெற்றோர் கூப்பிட்டார்கள் ஆனால் செல்லவில்லை. அதன் பிறகு நான் எவ்வளவு காலம் என் கணவரோடு சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சமாதானம் பேசி அனுப்பி வைத்தார்கள் அதன் பிறகு 1 மாதம் சேர்ந்து வாழ்ந்தோம். அதன் பிறகு தற்போது வரை நாங்கள் பிரிந்து தான் வாழ்கிறோமா என்றால் இல்லை. மேற்சென்ன வகையில் நாங்கள் சென்னையில் ஒன்றாக வசித்தபோது எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு அதன் பேரில் நான் சிட்லபாக்கம் காவல் நிலையத்தை அணுகி அவர்கள் சமாதானம் பேசிய வகையில் மேலும் 1மாதம் ஒன்றாக இருந்தோம். மேற்படி போலிசாரிடம் சமாதானம் பேசப்பட்டதற்கு சான்றாக ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் சென்னையில் வசித்த முகவரி என்ன என்றால் கான்வெண்ட் தெரு, தாம்பரம் என்ற முகவரியில் வசித்தோம். கதவு இலக்கம் நினைவில் இல்லை. உண்மையில் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு மேற்படி போலிசாரால் சமாதானம் பேசப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் என் கணவரோடு சேர்ந்து வாழ்ந்த போது

தாம்பத்திய வாழ்க்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4. தாமோதரன் என்ன வேலை செய்கிறார் என்றால் ஆசிரியராக உள்ளார். 3,4ம் எதிர்மனுதாரர்கள் எனது நகைகளை வைத்து இடம் வாங்கியதாக சொல்லும் நிலையில் அந்த இடம் எங்கு உள்ளது என்றால் வல்லுவக்குடியில் உள்ளது. அது விவசாய நிலம் ஆகும். அது யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் ஜெகதீசன் என்னும் எனது மாமனாரின் பெயரில் வாங்கப்பட்டது. எனது மாமனார் பெயரில் வாங்கப்பட்ட இடத்தின் ஆவணங்களை நான் இப்போது வரை பார்க்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே எனது மாமனார் பெயரில் இடம் வாங்கவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல 3,4ம் எதிர்மனுதாரர்கள் வரதட்சணை கேட்டு கொடுமை செய்யவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் குடும்பத்தாரை பழிவாங்க வேண்டும் என்னும் நோக்கில் 3,4 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் அவரது ஊரில் இடம் வாங்கித்தர சொல்லி எங்கள் வீட்டில் வந்தாரா என்றால சரிதான். அந்த இடம் சம்பந்தமான ஆவணம் ஏதும் கொண்டுவந்தாரா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., B.Ed படித்துள்ளேன். நான் படித்தது சம்பந்தமாக ஏதேனும் வேலைக்கு செல்கிறேனா என்றால் இல்லை, ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்று வருகிறேன். 1 ம் எதிர்மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்றால் மென்பொறியாளராக செயது வேலை வருகிறார். என்ன நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்ன ஊதியம் பெறுகிறார் என்றால் ரூபாய் 90,000/- பெறுகிறார். அந்த ஊதியம் சம்பந்தமாக சம்பளம் பட்டியல் விவரம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கூறியுள்ளார். நான் சொல்வது பொய் என்றாலும் உண்மையில் 1ம் எதிர்மனுதாரர் தினக்கூலியாக சென்னை காய்கறி மார்கெட்டில் வேலை செய்கிறார் என்றாலும் சரியல்ல. தற்போது வரை நான் எதிர்மனுதாரரோடு சேர்ந்து வாழ்வதற்கு மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் சீர்காழீ சார்பு நீதிமன்றத்தில் HMOP NO.84/2024ல் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் எதிர்கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 1ம் எதிர் மனுதாரர் என்மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகு தான், நான் இந்த வழக்கை சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்ய விவாகரத்து வழக்கில் என்ன விவரம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராஜநாயகம் என்பவர் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ராஜநாயகம் என்பவருடன் திருமணத்தை மீறிய உறவில் இருந்ததால் தான் 1ம் எதிர்மனுதாரர் வழக்கு தொடுத்துள்ளார் என்ற

விவரம் தெரியுமா என்றால் தெரியும். அது முற்றிலும் பொய். அதே போல அந்த விவகரத்து வழக்கில் தொடர்ந்து போன் மூலம்  இன்ஸ்டாகிராமில் இரவு நேரத்தில் மெசேஜ் செய்யததாக வழக்கில் சொல்லியுள்ளார். அது பொய்யான தகவல். நான் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் படிப்பு படித்ததால் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து கைநிறைய சம்பாரிக்கிறேன் என்றால் சரியல்ல. 9 மாதங்களுக்கு முன்பு சமூக நல விசாரணை பதிவேட்டில் கணவர், மாமியார், நாத்தானர், நாத்தனாரின் கணவர் வன்முறை செய்ததாக கூறியுள்ளது தொடர்பாக மருத்துவ சான்றிதழ் ஏதேனும் சமர்ப்பித்துள்ளோ என்றால் இல்லை. 1 முதல் 4 வரை உள் ள எதிர்மனுதாரர்கள் உங்களை கொடுமை செய்யவில்லை என்றும் , வழக்கிறிகாக பொய்யாக விசாரணையில் கூறிள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தற்போதுவரை சொத்து பற்றி விவரம் தாக்கல் செய்துள்ளோ என்றால் இல்லை. மேற்படி 1-4 எதிர்மனுதாரர்கள் என்னை வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தவில்லை என்றாலும் நீங்கள் விரும்பிய நபருடன் சுதந்திரமாக பேசுவதற்கும், பழகுவதற்கும் 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிர்மனுதாரர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஆடம்பரமாக வாழ்வற்காகவே 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறீர்கள் என்றால் சரியல்ல.